MAY 2023 **P/ID 35324/PTL3P**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையளிக்க.

1. தமிழில் தோன்றிய முதல் உரை நூல் எது?

2. இறையனார் களவியலுக்கு உரை கண்டவர் யார்?

3. சேனாவரையர், தொல்காப்பியத்தின் எந்த அதிகாரத்திற்கு உரை வரைந்தார்?

4. நம்பியகப் பொருள் கூறும் உரை வகை யாவை?

5. அந்தாதி நடை எவ்வாறு இயலும்?

6. ஆறுமுக நாவலரின் நடைச் சிறப்பு யாது?

7. இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரா?

8. நச்சினார்க்கினியர் உரை எழுதிய காப்பியம் எது?

9. மாட்டு என்பது யாது?

10. வடநூற் கடலை நிலை கண்டுணர்ந்த உரையாசிரியர் யார்?

11. அரையர் ஆற்றும் பணி என்ன?

12. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் செய்தோர் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. பாட்டிடை வைத்த குறிப்பு என்று தொல்காப்பியம் எதைச் சுட்டுகிறது?

14. பல்லவர் கால உரைநடை எத்தகையது?

15. மறைமலையடிகளின் உரைநடைத் தொண்டை எடுத்துரைக்க.

16. மூலபாட ஆய்வுக்கு உரைகள் உதவுமாற்றை நிறுவுக.

17. திருக்குறளுக்குக் காலந்தோறும் உரை எழுதப்படுவதேன்?

18. செய்யுள் வடிவில் தோன்றிய உரைகள் எவை?

19. காண்டிகை உரை எவ்வாறு அமையும்?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையளிக்க.

20. தமிழில் உரைநடை இல்லாத காலத்தையும் அதற்கான காரணங்களையும் எடுத்துரைக்க.

21. சோழர் கால உரைநடை வளர்ச்சியை விளக்குக.

22. தமிழ் உரைநடை வளர்ச்சியின் கற்காலமாக இருபதாம் நூற்றாண்டு திகழ்வதைத் தெளிவுறுத்துக.

23. 'உரையாசிரியர்களால் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சி மக்களிடையே பரவியது' என்னும் கூற்றை ஆராய்க.

24. உரைகள் அறிவுக் களஞ்சியங்களாகப் பயன்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

———————